**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர், நாள். 31.08.2021**

2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31.08.2021ம் தேதி வெள்ளி கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். 1103/2020/சி1)
**தீர்மான எண் : 149** பதிவு செய்யப்படுகிறது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் ஜீன் 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். 1103/2020/சி1)
**தீர்மான எண் : 150** பதிவு செய்யப்படுகிறது.

3)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 60V 1693ல் உள்ள கீழ்க்கண்டவாறு பழுது பணிகளை செய்வதற்கான விபரம்

1. அல்டினேட்டர் சரி செய்தல்
2. ஜெக்ஆப்சர் சரி செய்தல் புதியது மாற்றுதல்
3.பேன் பெல்ட் மாற்றுதல் புதியதாக
4.போக்ஸ் லைட் மாற்றுதல்
5.ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல்
6.பால்ஜாய்ண்ட் செக்அப் செய்தல்
7.ரோடு ஸ்பிரிங் பூஸ் மாற்றுதல்
8.சஸ்பென்சன் சரி செய்தல்
9.கதவு உள்ளே பீடில் சரி செய்தல்

மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதியினை சரி செய்ய M/s Automotive Manufactures Pvt. Ltd., Theni என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி பெறப்பட்டு, மேற்படி பழுது சரிசெய்வதற்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/—ஐ குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்படி பழுதினை சரிசெய்ய அவசர அவசியம் கருதி M/s Automotive Manufactures Pvt. Ltd., Theni விலைபுள்ளியினை ஏற்று விநியோகம் செய்யவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2026/2021/இ1

**தீர்மான எண் : 151** பதிவு செய்யப்படுகிறது.

**4)**இந்நகராட்சியில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்ய கீழ்க்கண்ட நபர்களை **10.08.2021**ஆம் தேதியில் Screening Committee ல் ஒப்புதல் வழங்கியுள்ளது . அதனடிப்படையில் மேற்படி கமிட்டி ஒப்புதல் வழங்கிய இரு நபர்களில் திரு.சி.கருத்தப்பாண்டி என்பவருக்கு Registered Structural Engineer Grade - II ஆகவும், திரு.அ.உதயகுமார் என்பவருக்கு Registered Structural Engineer Grade - III ஆகவும் நியமனம் செய்ய அனுமதித்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | திருவாளரின் பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 1 | கருத்தப்பாண்டி, த/பெ.சின்னவர் | D.C.E & B.E (Civil) |
| 2 | உதயகுமார், த/பெ.அய்யனார் | B.E (Civil) |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1177/2019/எப்1

**தீர்மான எண் : 152** அனுமதி அளிக்கப்படுகிறது

**<u>5)</u>**இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் 146 தவிர அரசாணை எண் 101 ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின்படி 270 பணியிடங்கள் தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.267. நாள்.30.06.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.16096/பி3/2016. நாள்.27.06.2016ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு 01.09.2018 முதல் 31.08.2019 முடிய ஒராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் 31.08.2019 உடன் முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மான எண்.501. நாள்.30.08.2019ல் பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தேவைப்படுவதால் 54 பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தனியார்மயம் மூலம் பணியமர்த்தி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் 01.09.2019 முதல் 29.02.2020 வரையிலான ஆறு மாத காலத்திற்கு 54 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு பொதுசுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 16.09.2019 மற்றும் 17.12.2019 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.03.2020 முதல் 30.04.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு பணி நீடித்தும், பின்பு 01.05.2020 முதல் 31.07.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்து , பின்பு 01.08.2020 முதல் 31.10.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்தும்,பின்பு 01.02.2021 முதல் 28.02.2021 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டித்தும், பின்பு 01.03.2021 முதல் 31.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்தும், பின்பு 01.06.2021 முதல் 31.08.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டித்து உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை உத்திரவு வராததாலும் கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தமிழக அரசு உத்திரவிட்டதாலும் பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 01.09.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00/–லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3777 /2019/எச்1

**தீர்மான எண் : 153** அனுமதி அளிக்கப்படுகிறது

**6)**போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு,கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளுக்காக 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு சட்டம் விதி 53 (1) (2) மற்றும் (3)ன் படி தேவைக்கேற்ப கொசுப்புழு ஒழிப்பிற்கு தற்காலிக மஸ்தூர்கள் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1819/2016/L3 , நாள். 08.11.2016ம் தேதிய கடிதத்தில் தற்காலிக மஸ்தூர் பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ள தெரிவித்ததற்கிணங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 60 தற்காலிக பணியாளர்களை அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை. நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களின் பணி ஒப்பந்தகாலம் ஜூலை 2020 உடன் முடிவடைவதாலும், தற்போது கொரோனா வைரஸ் அதிகளவில் இருந்து வருவதால் ,மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க வழிவகுக்கவும் மற்றும் பொதுச்சுகாதரத்தின் அவசர அவசியத்தினையும் கருத்தில் கொண்டு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2020–2021 ம் ஆண்டு தினக்கூலி மஸ்தூர் பணியாளர்களின் ஊதிய விகித அடிப்படையில் 01.09.2021 முதல் 30.11.2021 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீடித்து வழங்க உத்தேச செலவினத்தொகை ரூ.18.10/– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண் 6709/2013/எச்2)

**தீர்மான எண் : 154** அனுமதி அளிக்கப்படுகிறது

**7)**இந்நகராட்சியின் கீழ் இயங்கும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் ஒரு மாதத்திற்கு டோக்கன் அச்சடித்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/– பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதியும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருச்சிராப்பள்ளி அவர்களிடம் டோக்கன்கள் அச்சடிக்க விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1048/2018/பி3)**

**தீர்மான எண் : 155** அனுமதி அளிக்கப்படுகிறது

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.